# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,331 — 1937 ம் ஞு கார்த்திகைமீ 19 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய் பதிவுச் சட்டம்.

1901 ம் ஆண்டின் நாய் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய மட்டக்களப்பு நகர சங்கத்தின் பரிபால எல்லைகளுக்குள் வழங்குவதற்காக முறைமையான அதிகாரியால்; அதாவது, மட்டக்களப்பு நகர சங்கத் தலைவரினால் ஆக்கப்பெற்ற உபவிதிகள்.

எம். சின்னையா,
மட்டக்களப்பு நகர சங்கத் தலைவர்.

மட்டக்களப்பு
1937 ம் ஞு கார்த்திகைமீ 9 ந் உ.

உபவிதிகள்.

1. இந்த உபவிதிகளில் :—" தலைவர் " என்பது, மட்டக்களப்பு நகர சங்கத் தலைவரையும்; " மிருகப் பதிவுகட்டணம் " என்பது, குறித்த சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய வருடாவருடம் பதிவுக்காகக் கட்டவேண்டிய கட்டணத்தின் தொகையையும்; " சொந்தக்காரன் " என்பது நாயை யுடையவனாக அல்லது அதன் சொந்தக்காரனாக இருப்பவரையும், கருதும்.

2. மட்டக்களப்பு நகர சங்க எல்லைகளுள் வளர்க்கப்படும் ஒவ்வொரு நாய்க்கும் வருடாந்தக் கட்டணம் :—

ஆண் நாய் ஒன்றுக்கு ரூபா 1.
பெண் நாய் ஒன்றுக்கு ரூபா 1·50.

3. இந்த வருடாந்தக் கட்டணம் எந்த வருடத்திற்குக் கொடுபட வேண்டுமோ அந்த வருடத்திலே மேமீ 1 ந் திகதிக்குமுன் சொந்தக் காரனால் கொடுபட வேண்டும்.

4. இந்த வருடாந்தப் பதிவு கட்டணம் கொடுபட்டவுடன், தலைவர், அந்த நாயின் சொந்தக்காரனுக்குப் பின்னால் கூறப்படுபவைகளைக் கொடுப்பார் :—

(i.) பதிவு செய்யப்பட்டதைப்பற்றிய ஒரு அறிக்கைப்பத்திரம்;
(ii.) பதிவு இலக்கம் குத்தப்பெற்றதும் உலோகத்தாலாயதுமான ஒரு சீட்டு, அல்லது கழுத்துப்பட்டி ;

என்றாலும், பதிவு செய்வதற்கு விண்ணப்பம் பண்ணிக்கொள்ள வேண்டியதான நாயை, தனது பார்வைக்குக்கொண்டுவரும்படி, தலைவர் கேட்கலாம். பின் கூறப்படும் காரணங்களை முன்னிட்டு, அந்த நாய்க்குப் பதிவு அறிக்கைப்பத்திரமும் உலோகத்தாலாகிய சீட்டு அல்லது கழுத்துப்பட்டியும் கொடுக்க மறுக்கலாம் :—

(a) அந்த நாய் பார்வைக்குக் கொண்டுவரப்படாதிருப்பின்; அல்லது

(b) அந்த நாய், தலைவருடைய அபிப்பிராயத்தில், சீவிப்பதற்கு யோக்கியதையற்ற விதமாக அங்கவீனப்பட்டு அல்லது நோய்கொண்டு இருப்பின்; அல்லது

(c) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக உபத்திரவம் செய்யப்பட்டு, அல்லது அலட்சியம் பண்ணப்பட்டு இருப்பின்; என்பதாம்.

5. ஒரு நாய்க்குப் பதிவு அறிக்கைப்பத்திரம் கொடுத்தானதின்பின், அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தலனுப்பியபின், தலைவர் அந்த அறிக்கைப் பத்திரத்தை அழித்துவிடலாம்.

இப்படிச் செய்வது பின்னால் காணப்படும் காரணங்களைக் கொண்டேயாம் :—

(a) அந்த நாய் தலைவருடைய எண்ணத்தில், சீவிப்பதற்கு யோக்கியதை யற்றதாக அங்கவீனப்பட்டு அல்லது நோய்கொண்டதாகி விடுதல்; அல்லது

(b) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக உபத்திரவப்படுத்தப்பட்டு, அல்லது அலட்சியம் பண்ணப்பட்டு இருத்தல்; அல்லது

(c) அந்த நாய் தொற்றக்கூடிய அல்லது பரவக்கூடிய நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் காலத்தில் வேறு நாய்களுடன் ஊடாடுவதற்கு அதை அதன் சொந்தக்காரன் விடுதல்; ஆகியனவாம்.

6. (1) மேலே கூறப்பட்ட 4 ம் இலக்க உபவிதியின்படி பதிவு அறிக்கைப்பத்திரம் பெறாது இருப்பதும்; அல்லது 5 ம் இலக்க உபவிதியின்படி அப்பதிவுப்பத்திரம் அழிக்கப்பெற்றதுமான நாயின் சொந்தக்காரன், தலைவர் அறிவித்தற்பத்திரம் அனுப்பியவுடன், அவ்வறிவித்தலிற் குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திலும், இடத்திலும் அந்த நாயைக்கொண்டு சென்று காட்டவேண்டும்.

(2) இப்படியான ஒவ்வொரு நாயும், தலைவர் தகுதியென்று எண்ணும் வகையில் அழிக்கப்பெற்று அல்லது வேறு வகையாக நீக்கப்பெறலாம்.

7. பதிவு அறிக்கைப்பத்திரம்பெற்று ஒரு உலோகச் சீட்டு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு நாயும், அந்தச் சீட்டுப் பெலமுள்ளதாகவிருக்கும் காலம் முழுவதும், அந்தச் சீட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாய் அணிந்து இருக்கும்படியான எச்சரிக்கை கொள்ள வேண்டும்.

8. இந்த உபவிதிகளினால் தனக்கு உரிய தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதையாவது எவருக்காவது எழுத்துமூலமாத் தலைவர் கொடுக்கலாம்.

9. 9-1-1903 ன் 5,899 ம் இலக்கத்திலும், 21-4-1911 ன் 6,437 ம் இலக்கத்திலும் பிரசுரம் பண்ணப்பெற்ற, மட்டக்களப்பு லோக்கல் போட் உபவிதிகளாயுள்ளனவும் 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கங் கொண்ட ஸ்தலஸ்தாபன அரசாட்சிச் சட்டத்தின் 247 ம் பிரிவின்படி இப்பொழுது நடைமுறையிலிருப்பனவுமாகிய பிரமாணங்கள் இத்தாலழிக்கப்படுகின்றன.

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 1,647 (கேகாலை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் ஏதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ஞூ (நவம்பர்) கார்த்திகைமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ஞூ (அக்டோபர்) ஐப்பசிமீ 7 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹறே,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) அக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாம மாகாணம், கேகாலை டிஸ்திறிக், பெலிகல் கோறளை கண்டுபிற்றபற்று தெற்கு புஸ்பேன் கிராமத்திலிருக்கும் பின்வரும் துண்டுக்காணிகள் :—

பிரதமபடம் A 99.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | டொம்பனெமூக்கலான .. .. | 5 3 29 |
| 2 | ஷை .. .. | 4 3 22 |
| 3 | ஷை .. .. | 1 0 38 |
| | | 12 0 9 |

எல்லைகளாவன : வடக்கு, கிழக்கு, தெற்கு-உன்டுகொட கிராமத்தின் எல்லை ; மேற்கு-புவக்கஹஹேன எல, டீ. றனவால் உரித்துச்சொல்லப்படும் பகலக்கொஸ்வத்தேஹேன, ஜீ. அப்புஹாமியால் உரித்துச்சொல்லப்படும் பகலக்கொஸ்வத்தேஹேனை, டீ. றனவாலும் சிங்காவாலும் உரித்துச் சொல்லப்படும் கொஸ்வத்தேஹேனவும், டீ. றனவாலும் சிங்கவாலும் உரித்துச்சொல்லப்படும் மெல்லகலஹேனவும்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 1,648 (கேகாலை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் ஏதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று. 1937 ம் ஞூ (நவம்பர்) கார்த்திகைமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ஞூ (அக்டோபர்) ஐப்பசிமீ 14 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹாறே,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சபரகாம மாகாணம், கேகாலை டிஸ்திறிக், கல்பொட கோறளை, கல்பொட பற்று வடுலுபிற்றிய கிராமத்திலிருக்கும் துண்டுக்காணிகளாவன :—

பிரதமபட இல. 4,002.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கெதறகெலஹேன அல்லது நாதறன்வெல்கவஹேன.. | 0 0 31 |
| 2 | ஷை .. .. | 0 3 8 |
| 3 | ஷை .. .. | 0 1 31 |
| 4 | கெதரகெலேஹேன அல்லது உடகெதறஹேன .. | 0 1 36 |
| 5 | கெதரகெலஹேன அல்லது கலபொக்கஹேன .. | 0 2 28 |
| 6 | கெதரகெலஹேன அல்லது கெகல்பனலகெஹேன .. | 0 1 2 |
| 7 | கெதரகெலஹேன அல்லது உடகெதரஹேன .. | 0 2 22 |
| 8 | கெதரகெலஹேன அல்லது அளுத்வத்தஹேன .. | 0 0 37 |
| 9 | கெதரகெலஹேன அல்லது கல்பொத்தஹேன .. | 1 1 21 |
| | | 5 0 16 |

எல்லைகளாவன : வடக்கு-ஏ. அப்புஹாமியும் மறுவும் உரித்தாடும் கந்தஉல்லா ; கிழக்கு-அல்கேகம கிராம எல்லை, ஏ. அப்புஹாமி உரித்தாடும் கெதரகெலேஹேன அல்லது உடகொட்டுவஹேன, ஏ. அப்புஹாமியும் மறுவும் உரித்தாடும் திமியங்கஹாமூலவத்த ; தெற்கு-ஏ. அப்புஹாமியும் மறுவும் உரித்தாடும் திமியங்ககாமூலவத்த ; மேற்கு-ஏ. றங்ஹாமியும் மறுவும் உரித்தாடும் றித்திகஹாமுலவத்த முடியாலும் எச். புஞ்சிறாலவும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் கெறன்கேவத்த (பி. ப. 4,002 ல் 10ம் துண்டுக் காணி), எம். முனசிங்ஹ உரித்தாடும் கந்தஉள்ளவத்த, எம். முனசிங்ஹ உரிதாடும் கட்டுக்காயஹேன, ஆர். பிஞ்சோ உரித்தாடும் மெலிக்கேகொட்டுவா.

## காணி விற்பனவுகள்.

**Puttalam No. 79**.—1938 ம் ஆண்டு தைமீ 14 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் வடமேல் மாகாணத்து புத்தளம் சலாபம் பிரிவுகளின் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

5 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து புத்தளம் பிரிவு புத்தளம் பற்றும் இறவெற்ஸ் பகுதிகளிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 6,431. குறிச்சி—மகாசெம்புக்குளிய. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | செம்புக்குளியவத்தை .. | — .. | காலஞ்சென்ற ஜீ. எம். பெறேரு சேர்த்து அடைத்த தென்னந்தோட்டம் | 0 1 21 | 16·59* முழுவதற்கும் (1–3) |
| 2 | ஷை .. | — .. | ஷை .. .. | 0 0 26 | |
| 3 | ஷை .. | — .. | ஷை .. .. | 0 0 16 | |
| 16 | கரசிக்குளம்வத்தை .. | — .. | காலஞ்சென்ற ஜே. டீ. லாசறஸ் சேர்த்து அடைத்த தென்னந் தோட்டம் | 0 1 23 | 5·91* முழுவதற்கும் |

பிளான் இலக்கம் A 292. குறிச்சி—புத்தளம் தெற்கு. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2 | அந்தோனி அம்மா தோட்டம் | — .. | மிக்கேல் அந்தோனிப்பிள்ளை சேர்த்தடைத்த பாழ்நிலம் .. | 0 0 1·02 | 2* முழுவதற்கும் |

* 380 ம், 386 ம் இல. காணிச் சட்டத்தின்படி. தீர்ப்பதற்கு.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஆண்டு கார்த்திகைமீ 9 ந உ.

வீ. குமாரசுவாமி,
எக்ரிங் காணிக் கொம்மிஷனர்.

**Puttalam No. 80.**—1938 ம் ஆண்டு தைமீ 14 ந் திகதி வெள்ளிக்கிழமை காலே 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் வடமேல் மாகாணத்து புத்தளம் சலாபம் பிரிவுகளின் கவற்னமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

ஒரு காணித்துண்டு, வடமேல் மாகாணத்து புத்தளம் பிரிவு, டெமலஹற்பற்று பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் A 493. குறிச்சி—தென்னன்குதியாவா ஆனேமடுவா. உரித்தாளி—சலாபக்குடி. ஸ்ரீ ஜே. சவரிமுத்துவும் அரசாட்சியாரும்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2 | தென்னன்குறியாவேவெல .. | — .. | நெற்காணி .. | .. 1 0 26 | 20·34* முழுவதற்கும். |

* 380 ம், 386 ம் காணிச்சட்டங்களின்படி தீர்ப்பதற்கு.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஆண்டு கார்த்திகைமீ 9 ந் உ.

வீ. குமாரசுவாமி,
எக்ரிங் காணிக் கொம்மிஷனர்.

---

**Puttalam No. 81.**—1938 ம் ஆண்டு தைமீ 19 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு சலாபக் கச்சேரியில் வடமேல் மாகாணத்து புத்தளம் சலாபம் பிரிவுகளின் கவற்னமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

30 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து சிலாபப் பிரிவு பிற்றிகல் கோறளே வடக்குப் பகுதியிலிருக்கின்றன.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலே ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 7,024. குறிச்சி—ஹெலம்பவட்டவான. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 2 | நெலுக்குளிய .. | — .. | தென்னந்தோட்டம் ஜே. எம். புஞ்சிறுளா சேர்த்தடைத்தது .. | 0 0 12 | 35* |
| | பிளான் இலக்கம் A 433. குறிச்சி—பகலம்மையாவா. உரித்தாளி—அரசாட்சியாரும், டீ. சீ. வீரசிங்கமும் மறுபேரும். | | | | |
| 1 | தல்ககாகல .. | — .. | தென்னந்தோட்டம் .. | .. 0 3 3 | 35* |
| | உரித்தாளி—அரசாட்சியாரும், லமஎற்றனவும். | | | | |
| 2 | கல்யாயவத்தை .. | — .. | தென்னந்தோட்டம் .. | .. 0 2 10 | 35* |
| | உரித்தாளி—அரசாட்சியாரும் எச். எம். பி. அப்புஹாமியும். | | | | |
| 3 | பலுகமகும்புற .. | — .. | நெற்காணி .. | .. 2 0 22 | 10* |
| | உரித்தாளி—அரசாட்சியாரும் டபிள்யு. எம். மெனிக்ஹாமியும். | | | | |
| 4 | முதுக்கிறியல்கும்புற .. | — .. | நெற்காணி .. | .. 1 0 25 | 10* |
| | உரித்தாளி—அரசாட்சியாரும் சீ. பின்ஹாமியும் மறுபேரும். | | | | |
| 5 | முதுக்கிறியல்ஹேன .. | — .. | சேனே .. | .. 3 1 34 | 35* |
| | உரித்தாளி—அரசாட்சியாரும் எஸ். ஏ. ஹெண்டிறிக்சிஞ்ஞோவும் மறுபேரும். | | | | |
| 6 | அலுத்கும்புற .. | — .. | பழைய நெற்காணி .. | .. 2 2 12 | 35* |
| | உரித்தாளி—அரசாட்சியாரும் ஏ. ஏ. அப்புஹாமியும். | | | | |
| 7 | ஷை .. | — .. | நெல் வயல் ... | .. 2 3 35 | 35* |
| | பிளான் இலக்கம் A 459. குறிச்சி—ஆராச்சிக்கட்டுவா. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | பகலகும்புறஹேன, பகலகும்புற பகலகும்புறவத்தை | — .. | எம். பீ. பர்னுந்து சேர்த்தடைத்த சேனே, நெற்காணி, தோட்டம் | 0 2 31 | 35* |
| 2 | பகலகும்புற, பகலகும்புறவத்த | — .. | எம். பீ. பர்னுந்து சேர்த்தடைத்த நெற்காணியும் தோட்டமும் | 0 0 37 | 35* |
| 3 | டொஸ்தரவத்தை .. | — .. | டக்ரர். ஏ. ஏ. எம். வீரப்பெருமாள் சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 5 1 7 | 35* |
| 4 | ஷை .. | — .. | ஷை .. | .. 0 3 13 | 60* |
| 5 | மினிப்பிற்றனியா .. | — .. | பிரித்துவைக்கவேண்டிய சவக்காலே .. | .. 0 3 9 | —† |
| 6 | றத்தவத்தை .. | — .. | பளவாசமுத்து நாடார் சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் .. | 0 0 15 | 60* |
| | கண்டசிக் கிராமப்படம் 70. குறிச்சி—புளியங்காற. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 54 | புளியங்காறவெவ .. | — .. | பிரித்துவைக்கவேண்டிய குளம் .. | .. 11 0 36 | —† |
| 55 | திம்பிறிகஹாடெனிய .. | — .. | குளத்துக்குச் சேமித்துவைக்கவேண்டியது | .. 0 1 5 | —† |
| 56 | திம்பிறிகஹாடெனியவத்தை .. | — .. | ஸ்ரீ ஜே. தியாகராசா சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | .. 1 0 14 | 45* |
| 57 | திம்பிறிகஹாடெனிய .. | — .. | குளத்துக்காகச் சேமித்துவைக்கவேண்டியது | .. 0 0 20 | —† |
| 58 | ஷை .. | — .. | றேட்டுக்குச் சேமிப்பு .. | .. 0 0 12 | —† |
| | கண்டசிக் கிராமப்படம் 683. குறிச்சி—தாமரைக்குளம். உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 65 | வெவகாவாவத்தை .. | — .. | டீ. எம். புஞ்சிஹாமி சேர்த்தடைத்த தோட்டம் | .. 0 0 28 | 5·25* முழுவதற்கும். |
| | பிளான் இலக்கம் 7,090. குறிச்சி—கிரியங்கள்ளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 8 | பனியவயல் .. | — .. | எம். எம். முத்துசுப்பையாப்பிள்ளையும் மறுபேரும் சேர்த்தடைத்த நெற்காணி | 0 0 18 | 35* |
| 9 | கிறியங்கள்ளிலவுணதோட்டம் .. | — .. | புத்தளம்குடி எஸ். எம். ஏ. எல். லெச்சுமணன் செட்டியார் சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 0 0 13 | 10* |
| 13 | அக்கரைவேலே .. | — .. | புதுக்குடியிருப்புக்குடி அப்துல் மஜீதும் மறுபேரும் சேர்த்துக்கொண்ட நெற்காணி | 0 3 37 | 10* |
| 27 | மாட்டின்டேல்தோட்டம் .. | — .. | பத்துலுஓயாகுடி ஜீ. எல். ஜே. ஹென்றி பெறேருவும் மறுபேரும் சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 0 3 36 | 10* |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 40 | தாராக்குடிவில்லுவத்தை .. | — .. | நீர்கொழும்புக்குடி கே. டீ. விக்ரொர் சேர்ந்தடைத்த தென்னந்தோட்டம் | 1 0 8 | 10* |
| 51 | தாராக்குடிவில்லுதோட்டம் .. | — .. | உடப்புக்குடி முத்தரக்குப்பிள்ளையும் மறுபேரும் சேர்த்த தென்னந்தோட்டம் | 0 1 8 | 10* |
| | பிளான் இலக்கம் A 499. குறிச்சி—ஹெலம்பவட்டவான. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | கல்குளியவத்தை .. | — .. | கொழும்பு ஹோட்டன் பிளேஸ்குடி ரி. முத்துக்குமாரு சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 0 0 13 | 110* |
| | பிளான் இலக்கம் A 500. குறிச்சி—நல்லடறங்கட்டுவா. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | இலக்கட்டுவேவத்தை .. | — .. | எஸ். எம். ஜே. பறனந்து தென்னந்தோட்டத்திற்குச் சேர்த்தடைத்த பாகம் | 0 1 14 | 60* |
| 2 | இலக்கட்டுவெகெலே .. | — .. | ரோட்டுக்குச் சேமிப்பு .. .. | 0 0 1 | —† |
| | பிளான் இலக்கம் A 503. குறிச்சி—நல்லடறங்கட்டுவா. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | இலக்கட்டுவாவத்தை அல்லது நெலுங்குளியவத்தை | — .. | எஸ். எம். ஜே. பர்னந்து தென்னந்தோட்டத்திற்குச்சேர்த்தடைத்த பாகம் | 0 0 12 | 60* |

* சேமித்துவைப்பதற்கு. † நீர்ப்பதற்கு.

காணிக் கொம்மிஷனர் கந்தோர், வீ. குமாரசுவாமி,
கொழும்பு, 1937 ம் ஆண்டு கார்த்திகைமீ 9 ந் உ. எக்ரிங் காணிக் கொம்மிஷனர்.

---

**Puttalam No. 82.**—1938 ம் ஆண்டு தைமீ 19 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாருவில்லா சேர்குட் பங்களாவில் வடமேல் மாகாணத்து புத்தளம் சலாபம் பிரிவுகளின் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

4 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து சிலாப பிற்றிகல் கோறளை தெற்கு பகுதியிலிருக்கின்றன.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 6,511. குறிச்சி—பகல-வலகப்பிற்றிய. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 6 | மறண்டவெள்ளவத்தை .. | — .. | டக்ரர். விஜயசிங்க சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் .. | 1 0 25 | 50* முழுவதற்கும். |
| | பிளான் இலக்கம் A 240. குறிச்சி—கிரிமெற்றியான மேற்கு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 4 | டெல்கஹாகொடல்லவத்தை | — .. | ஸ்ரீ டபிள்யு. எச். ஈ. ட சில்வா சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 0 0 32·6 | 5·86* முழுவதற்கும். |
| 5 | கிரிமெற்றியானவத்தை .. | — .. | எம். ஆர். ஆர். எம். எம். ஆர். ருமசாமிச்செட்டியார் சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 0 0 10 | 2·97* முழுவதற்கும். |
| | பிளான் இலக்கம் 4,812. குறிச்சி—ஹல்டன்வோன. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 16 | உறுக்கனுகெலேவத்தை .. | — .. | எஸ். எம். எலாறிஸ் நோன ஹாமினே சேர்த்தடைத்த தென்னந்தோட்டம் | 0 0 25 | 1·56* முழுவதற்கும். |

* 380–386 ம் காணிச் சட்டத்தின்படி தீர்ப்பதற்கு.

காணிக் கொம்மிஷனர் கந்தோர், வீ. குமாரசுவாமி,
கொழும்பு, 1937 ம் ஆண்டு கார்த்திகைமீ 9 ந் உ. எக்ரிங் காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மெடமுல்லச் சவக்காலையைப் பெருப்பித்தற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 785. குறிச்சி—பொறக்கடவத்த

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஜம்புகொடெல்ல .. | தென்னங்காணி, 25 வருஷஞ்சென்ற 47 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 2 கமுகுவும், ஒரு நிலையற்ற கிணறுமுள்ளது | எம். இஸ்ரீபின் பெறிருவும், எம். ஜோசேப் பெறிருவும், இருபேரும் மினுவாங்கொட | 0 2 5·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 16 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி, கே. வைத்தியனுதன்,
1937 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 15 ந் உ. உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொஸ்பெலின்கிச பாலத்துக்குக்கிட்டஉள்ள தீங்கான மூலையை அகலித்தற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லபடும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 20,115. குறிச்சி—கற்றுபெட்ட.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெல்கஹவத்த, இறைவரி இலக்கம் 3 ன் பகுதி | தென்னங்காணி, 13 வருஷஞ்சென்ற 3 தென்னையும் 47 வருஷஞ்சென்ற 1 தென்னையுமுள்ளது | எம். பொர்லன்றினு பேர்ணுந்து, இல். 12, கற்றுபெட்ட | 0 0 3·6 |
| 2 | டெல்கஹவத்த, இறைவரி இலக்கம் 4 ன் பகுதி | தோட்டம், 37 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 3 கமுகுவும் ஒரு ஓட்டுக்கட்டட வீடுமுள்ளது | ஜீ. எ. பேர்ணுந்து, சென்ற் ஹெலன்ஸ் கொன்வென்ற் றேட்டு, மொறட்டுவா | 0 0 7·4 |
| 4 | ஷை .. | தோட்டம், 15 வருஷஞ்சென்ற 9 கமுகுவுள்ளது .. | ஷை .. | .. 0 0 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியமாரர்மூலமாய் 1937 ம் ஆல (டிசெம்பர்) மார்கழி மாசம் 20 ந் தேதியிலன்று 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1937 ம் ஆல (நவம்பர்) கார்த்திகைமீ 15 ந உ.

எஸ். எவ். அமரசிங்ஹ,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கண்டி–ஹரகம–குறுந்துஓய ரோட்டை சரிபண்ணுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 461. குறிச்சி—நாபொத்தவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | புலத்வத்தைஅஸ்வெத்தும .. | வயல் .. | நாபொத்தவெலகுடி சிரிவர்தனகே கர்த்தேலிஸ் .. | 0 0 23·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவ்ரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆல (டிசெம்பர்) மார்கழி மாசம் 10 ந் தேதியிலன்று முன்னேரம் 10 மணிக்கு பாதியபெலெல்ல கிராமாதிகார கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1937 ம் ஆல (நவம்பர்) கார்த்திகைமீ 12 ந உ.

ஆர். எம். டேவிஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கறத்தோட்ட பெண் பாடசாலைத் தோட்டத்தை பெருப்பிக்கிற தென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

F. V. P. 500 ன் சேர்பு 6. குறிச்சி—கறத்தோட்டை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 39 | டுன்வத்த . . . | 7 இத்துல்மரங்களும், ஒரு கமுகுவும், 15வருஷத்துக்கும் 25 வருஷத்துக்கும் இடையான வயதுள்ள ஒரு மாமரமும் உள்ள தோட்டம் | டீ. எச். விக்கிறமாசிசி மொகத்தல, ஜே. எ. டொன் கிறிஸ்தினஹாமினே, டபிள்யு. ஜே. டொன் அந்திரிஸ், குணறட்ண பபாஹாமினே, வடனவித்திகே கின்னிஹாமியும், சிங்கநெத்திகே . கீனிஹாமியும், எல்லாரும் கக்மனவிலிருக்கும் கறத்தோட்டையில் உள்ளவர்கள் | 0 0 9·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆல (டிசெம்பர்) மார்கழி மாசம் 20 ந் தேதியிலன்று காலமே 9.30 மணிக்கு ஹக்மன வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1937 ம் ஆல (நவம்பர்) கார்த்திகைமீ 12 ந உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

---

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டெவலகமவில் அரசாட்சியாரால் தாங்கப்பட்ட பள்ளிக்கூடம் கட்டுகிற தென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

F. V. P. 165 ன் சேர்பு 3. குறிச்சி—டெவலகம.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 80 | கிறகஹஹேன .. | ஒரு முப்பது வயதுள்ள பிலாமரமும், ஒரு வயதுக்குட்பட்ட 9 தென்னங் கன்றுகளும், எல்லையில் 8 கமுகுவும், 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடையிலுள்ள ஒரு ஈரப்பிலாமரமும், 10 வயதுள்ள ஒரு பருத்தி மரமும், 9 தோடங்கன்றுகளும், ஒரு வயதுக்குட்பட்ட 7 முருங்க மரங்களும், ஒரு அனுத்திய பள்ளிக்கூடகட்டடமும், ஒரு அனுத்திய அடுப்படியும், ஒரு அனுத்திய கக்கூசும் உள்ள தோட்டம் | ஹக்மனுவிலிருக்கும் மகமடீத்தவிலிருக்கும் றடவெலவிலிருக்கும் டொன் அல்விஸ் முனசிங்க | 1 0 10·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆல (டிசெம்பர்) மார்கழி மாசம் 20 ந் தேதியிலன்று காலை 9.45 மணிக்கு ஹக்மன வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1937 ம் ஆல (நவம்பர்) கார்த்திகைமீ 12 ந உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வகலகனன்கவில் ஒரு பகிரங்கக் கிணறு வெட்டிக் கட்டுகிறதென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

F. V. P. 560 ன் சேர்பு B. குறிச்சி—வகலகனங்க.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 328 | கல்கடுவேஹேறன அல்லது லிண்ட காவஹேறன | ஒரு தென்னமரமும், 8 வயதுள்ள ஒரு கமுகுவும், கல்லால்கட்டப்பட்ட ஒரு கிணறுமுள்ள தோட்டம் | வகலகனங்கவிலிருக்கும் கே. ஜீ. டொன் டாவித்தும் கே. ஜீ. டோறு சிமறவும் | 0 0 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 21 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு அக்குறேசா வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1937 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 12 ந உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொக்கவலவில் ஒரு பகிரங்க கிணறு வெட்டுகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 578. குறிச்சி—பறவகேற.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | குறுண்டுவத்த .. | கல்லால் கட்டப்பட்ட கிணறும் சீமெந்துபோடப்பட்ட நிலமுமுள்ள ஒரு தென்னந்தோட்டத்தின் பகுதி | கெக்கனடுறேயிலிருக்கும் நாஉட்டுன்னேயிலிருக்கும் ஹேவமட்டுமலியனகே டொன் ஹெறிக்கும், டொன் சியடோரிசும், ஜினடாசாவும், கெக்கனடுறேயிலிருக்கும் பறவஹெறவிலிருக்கும் இந்துறுவாகே டோறு சிசிலி ஆறு அபைய விக்கிறமவும், டொன் சுவானிசும், டொன் டியோனிசும், டொன் அல்லிசும் மட்டுமஹாமியும், கெக்கனடுறேயிலிருக்கும் உட அப்பறெக்கயிலிருக்கும் ஹேவாஹல்பெகே பாலஹாமியும் ஹேவா பெத்தகே பீரிஸ் அப்புவும் | 0 0 2·09 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 21 ந் தேதியிலன்று பிற்பகல் 3 மணிக்கு கெக்னடுற கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1937 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 12 ந உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கட்டுக்கரைக்குள யுபிலி வீதி என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 1,200. குறிச்சி—ஆலங்குளம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | காட்டுக்காணி .. | .. பாழ் நிலம் .. | .. ஆலங்குளங்குடி சூசை கிறிஸ்தோகு .. | 0 0 15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 17 ந் தேதியிலன்று 11 மணிக்கு மன்னுர்க் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மன்னுர்க் கச்சேரி,
1937 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 16 ந உ.

டீ. ஜீ. எல். பிரோ,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அல்பிட்டிய கிராமத்திற்கு சவக்காலைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 602. குறிச்சி—தியபறுவத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 83 | கெடபொல்ஹேனவான்புறேஹேன .. | சேனை .. | எஸ். ஏ. ஐ. எலப்பாத்தவும் வகும்புறகே கிரிபெத்தாவும் .. | 1 0 0 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய எழுத்தில் அதிகாரம்பெற்ற காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 15 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு மாதம்பே வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1937 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 15 ந உ.

டபிள்யு. ஹொல்ம்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் எல்லகாவ புதுப்பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 218. குறிச்சி—யடிபாவ்வ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 544 | பொல்கஹாஹேனபாறவத்த | ஶ்ரேட்டு | பீ. ஏ. மெனிக்ஹாமி | 0 0 4·8 |
| 545 | பொல்கஹாஹேனேதெனிய | ஶ்ரேட்டு | ஷை | 0 0 3·5 |
| 546 | தன்கன்தேஹேன | ஶ்ரேட்டு | ஷை | 0 0 4·1 |
| 547 | பொல்கஹாஹேனேவத்த | ஶ்ரேட்டு | ஷை | 0 0 5·5 |
| 548 | தன்கன்தேஹேன | ஶ்ரேட்டு | ஷை | 0 0 3·2 |
| 549 | ஷை | சேனை | ஷை | 1 0 22·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார். என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தமாக அல்லது அவரவருடைய எழுத்தில் அதிகாரம்பெற்ற காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆு (டிசெம்பர்) மார்கழி மாசம் 13 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு கிரிஎல்ல கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1937 ம் ஆு (நவம்பர்) கார்த்திகைமீ 15 ந் உ.

டப்ளியு. ஹொல்ம்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற் சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கேகாலை டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை, 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாதம் 1 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையில் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

ஆர். எஸ். வீ. பொலியர்,
பிஸ்கால், சப்ரகமுவ.

பிஸ்கால் கந்தோர், இரத்தினபுர,
1937 ம் ஆு (நொவெம்பர்) கார்த்திகைமீ 13 ந் உ.

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

மாத்துறை நானு கடவத்தைக்குள்ளாகிய கொடாகமே சரியே குடியிருக்கும் விதானகமகே பான்த்தீலின்ஹ ஆபாயென்ற நான் இதற்கு மூன்று மாதங்களுக்கு பின்னால் கொழும்பு றெஜிற்றார் ஜெனறளவர்களிடம் மாத்தறை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையால் வேலைசெய்யக்கூடிய நொத்தாரிசுவாக கேள்விப்பத்திரம் போட நாடியிருக்கிறேன்.

மாத்துறை,
1937 ம் ஆண்டு மேமீ 30 ந் உ.

வீ. பீ. ஆபா,

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.